சுருக்கம்

சமூக நீதித்துறை – பழங்குடியினர் மேம்பாடு – 2026–2027 – மாண்புமிகு அமைச்சர் (சமூகநீதி) அவர்களால் வெளியிடப்பட்ட அறிவிப்பு – பழங்குடியின மக்களின் கலாச்சாரம், பண்பாடு, மற்றும் வாழ்க்கை நடைமுறைகளை அறிந்து கொள்ளும் பொருட்டு "தடம்" – பழங்குடியினர் மரபு நடை (TN Tribal Trails – Thadam) கலாச்சார பயண நிகழ்ச்சி நடத்துதல் – ரூ.1,08,00,000/– நிதி ஒப்பளிப்பு வழங்கி – ஆணை வெளியிடப்படுகிறது.

சமூக நீதித் (ப.மே.2) துறை

அரசாணை (நிலை) எண். 85

நாள்: 16.10.2026
பராபவ வருடம்
புரட்டாசி மாதம் 29–ஆம் நாள்
திருவள்ளுவர் ஆண்டு 2057
படிக்கப்பட்டது:–

1. 2026–2027–ஆம் ஆண்டிற்கான மாண்புமிகு அமைச்சர் (சமூக நீதி) அவர்களின் அறிவிப்பு நாள் 27.08.2026.
2. இயக்குநர், பழங்குடியினர் நலம் அவர்களின் கடித ந.க.எண். ப.மே/இ2/3503635/2026, நாள் 28.09.2026.

ஆணை:

மாண்புமிகு அமைச்சர் (சமூக நீதி) அவர்களால் 2026–2027–ஆம் ஆண்டிற்கான சமூக நீதித்துறையின் மானியக் கோரிக்கையில் கீழ்க்கண்ட அறிவிப்பு (வரிசை எண்.39) வெளியிடப்பட்டது.

"பழங்குடியின மக்களின் கலாச்சாரம் பண்பாடு, மற்றும் வாழ்க்கை நடைமுறைகளை அறிந்து கொள்ளும் பொருட்டு "தடம்" பழங்குடியினர் மரபு நடை (TN Tribal Trails – Thadam) கலாச்சார பயண நிகழ்ச்சி நடத்தப்படும்"

பழங்குடியின மக்களின் பண்பாடு, கலாச்சாரம் மற்றும் வாழ்க்கை நடைமுறைகளை அறிந்து கொள்ளும் பொருட்டு, "தடம் –பழங்குடியினர் மரபு நடை" எனும் கலாச்சார பயண நிகழ்ச்சியை ஐந்து மாவட்டங்களில் ஏற்படுத்துவதன் மூலம், பழங்குடியின மக்களின் வாழ்வாதாரம் மேம்படுத்தப்படும். இந்த மரபு நடை பயண நிகழ்ச்சியை செயல்படுத்த ஏதுவாக இதில் ஈடுபடும் பழங்குடியின மக்களுக்கு உரிய பயிற்சி அளிக்கப்படும்.

இதன் மூலம், பழங்குடியின மக்களின் மரபு அறிவு மற்றும் கலாச்சாரத்திற்கு பொருளாதார மதிப்பை உருவாக்கி, உள்ளூர் மக்களுக்கு நிலையான வாழ்வாதார வாய்ப்புகள் ஏற்படுத்தப்படும்.

த.பி.பா.

3. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட பழங்குடியினர் நல இயக்குநர் அவர்களின் கடிதத்தில் தமிழ்நாட்டின் பழங்குடியின மக்களின் மரபு, பண்பாடு, பாரம்பரிய அறிவு, உணவு, கைவினை, கலை, வாழ்வியல் மற்றும் பாரம்பரியத்தை பற்றி பொதுமக்கள், மாணவர்கள், இளைஞர்கள், சுற்றுலாப் பயணிகள் அறிந்து கொள்ளவும், அவற்றை பாதுகாத்து அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லும் நோக்கத்துடன் இத்திட்டம் செயல்படுத்தபட உள்ளது என்றும், இத்திட்டத்தின் மூலம் பழங்குடியின இளைஞர்களுக்கு வழிகாட்டுதல், கைவினை, கதைசொல்லல் மற்றும் கலாச்சார நிகழ்வுகள் போன்றவற்றில் பயிற்சி வழங்கி, வேலைவாய்ப்பு மற்றும் வருமானம் பெறும் வாய்ப்புகள் உருவாக்கப்படும் என்றும் மேலும், "மரபு நடை" பழங்குடியின சமூகங்களுக்கு நிலையான வருமானம் பெறும் வாய்ப்பாக உருவாக்கப்பட்டு, அவர்களின் மரபு மற்றும் பாரம்பரியத்திற்கான மதிப்பு, சமூகப் பங்கேற்பு, பொருளாதார மேம்பாடு ஆகியவற்றை வலுப்படுத்தும் வகையில் செயல்படுத்தப்படும் என்றும் பழங்குடியினர் நல இயக்குநர் தெரிவித்துள்ளார்.

4. இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கான நோக்கங்கள் மற்றும் செயல்பாடுகள் விவரம் பின்வருமாறு:–

நோக்கங்கள்:

- தேர்ந்தெடுக்கப்பட்ட பழங்குடியின பகுதிகளை மையமாகக் கொண்டு பாதுகாப்பான மற்றும் சமூக பங்கேற்புடன் கூடிய மரபு நடைப் பாதைகளை உருவாக்குவது.
- அப்பகுதியில் உள்ள பயிற்சி பெற்ற பழங்குடியின இளைஞர்களை மரபு நடை வழிகாட்டிகளாக உருவாக்கி, அவர்களின் பங்கேற்பை உறுதி செய்வது.
- பழங்குடியினர்களின் பாரம்பரிய பாடல்கள், கதைகள், கலைகள், கைவினைகள், உணவு முறைகள், விவசாய நடைமுறைகள் மற்றும் பாரம்பரியம் ஆகியவற்றை பழங்குடியினர்களின் ஒப்புதலுடன் ஆவணப்படுத்தி பாதுகாப்பது.
- மாணவர்கள், இளைஞர்கள் மற்றும் பொதுமக்களுக்கு அனுபவ அடிப்படையிலான பண்பாட்டு கற்றல் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை வழங்குவது.
- பழங்குடியின பெண்கள், கைவினைஞர்கள், சிறு உற்பத்தியாளர்கள் மற்றும் சுயஉதவிக் குழுக்களை இணைத்து, உள்ளூர் தயாரிப்புகளுக்கு சந்தை வாய்ப்புகளை உருவாக்குவது மற்றும் பழங்குடியினர் சமூகத்தின் பொருளாதார மேம்பாட்டை ஊக்குவிப்பது.
- இயற்கை மற்றும் பண்பாட்டுப் பாதுகாப்பை ஒருங்கிணைத்து, பொறுப்பான மற்றும் சமூக நலன் சார்ந்த சுற்றுலா மாதிரியை உருவாக்கி, வெற்றிகரமான மாதிரியை பிற பகுதிகளுக்கு விரிவுபடுத்துவது.

செயல்பாடுகள்:

1. **மரபு நடைப் பாதை அமைத்தல் மற்றும் மேம்படுத்துதல்** – பாதுகாப்பான நடைப்பாதைகள், வழிகாட்டிப் பலகைகள் மற்றும் அடிப்படை வசதிகள் ஏற்படுத்துதல்.
2. **மலையேற்றம் மற்றும் இயற்கை நடைப்பயணம்** – பழங்குடியின இளைஞர்களின் வழிகாட்டுதலுடன் இயற்கைச் சூழல் மற்றும் பாரம்பரியத்தை அறிமுகப்படுத்துதல்.
3. **பழங்குடியினர்களின் வாழ்க்கை** – பழங்குடியினரின் குடியிருப்பு, வாழ்வியல், வேளாண்மை மற்றும் பாரம்பரிய நடைமுறைகளை அறிமுகப்படுத்துதல்.
4. **பழங்குடியினர்களின் கலை, இசை, நடனம் மற்றும் கதைசொல்லல்** – பாரம்பரிய கலை நிகழ்ச்சிகள் மற்றும் பண்பாட்டு நிகழ்வுகளை நடத்துதல்.
5. **பழங்குடியினர்களின் பாரம்பரிய உணவு அனுபவம்** – பழங்குடியினர்களின் பாரம்பரிய உணவு வகைகள் மற்றும் தயாரிப்பு முறைகளை அறிமுகப்படுத்துதல்.
6. **பழங்குடியினர்களின் கைவினைப் பொருட்கள் தயாரிப்புகள்** – பழங்குடியின தயாரிப்புகளைக் காட்சிப்படுத்தி விற்பனை செய்வதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்துதல்.
7. **பழங்குடியினர்கள் வரலாறு மற்றும் பண்பாடு ஆவணப்படுத்தல்** – பாரம்பரிய அறிவு, கதைகள், பாடல்கள் மற்றும் பண்பாட்டு நடைமுறைகளை ஆவணப்படுத்துதல்.
8. **வழிகாட்டி பயிற்சி** – அப்பகுதியில் உள்ள பழங்குடியின இளைஞர்களுக்கு மரபுநடை, மலையேற்றம், முதலுதவி மற்றும் பாதுகாப்பு தொடர்பான பயிற்சி வழங்குதல்.
9. **பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு** – பயணிகளின் பாதுகாப்பையும் இயற்கை மற்றும் பண்பாட்டு வளங்களின் பாதுகாப்பையும் உறுதி செய்தல்.

5. இத்திட்டத்தை செயல்படுத்த தேர்வு செய்யப்பட உள்ள 5 மாவட்டங்கள் மற்றும் கிராமங்களின் விவரங்கள் பின்வருமாறு:–

மாவட்டம்	கிராமங்கள்	பழங்குடியினர்	மரபு நடை – முக்கிய அனுபவங்கள்
நீலகிரி	குன்னூர், கூடலூர்	அழிவின் விளிம்பிலுள்ள பண்டைய பழங்குடியினர்கள்	பாரம்பரிய குடியிருப்பு, சிறுதானிய உணவு, தேன் மற்றும் வனப்பொருட்கள், கைவினைப் பொருட்கள்.
கோயம்புத்தூர்	வால்பாறை	முதுவன் மற்றும் காடர்	பாரம்பரிய குடியிருப்பு, சிறுதானிய உணவு, தேன் மற்றும் வனப்பொருட்கள், விவசாயம், நாட்டுப்புறப் பாடல்–நடனம், கைவினைப் பொருட்கள்.

மாவட்டம்	கிராமங்கள்	பழங்குடியினர்	மரபு நடை – முக்கிய அனுபவங்கள்
திருவண்ணாமலை	ஜம்னா மத்தூர் / ஜவ்வாது மலைப் பகுதி	மலையாளி	பாரம்பரிய குடியிருப்பு, சிறுதானிய உணவு, தேன் மற்றும் வனப்பொருட்கள், விவசாயம், நாட்டுப்புறப் பாடல்–நடனம், கைவினைப் பொருட்கள்
கன்னியாகுமரி	பேச்சிப்பாறை	காணி (Kani)	பாரம்பரிய உணவு, தேன் மற்றும் வனப்பொருட்கள், மூலிகை அறிவு, இயற்கை–வன நடை, பாரம்பரிய குடியிருப்பு, இசை–பாடல்கள்
ஈரோடு	சத்திய மங்கலம்	சோளகர், இருளர் மற்றும் ஊராளி	வாழ்வியல், தேன்/ வனப்பொருட்கள், பாரம்பரிய விவசாயம், உணவு, கைவினை, இசை–நடனம்

6. இத்திட்டத்திற்கான நிதி மதிப்பீடு பின்வருமாறு :–

வ. எண்	பணியின் விவரம்	தொகை (ரூ. இலட்சத்தில்)
1.	விழிப்புணர்வு மற்றும் சந்தைப்படுத்தல் (பாரம்பரிய உணவு மற்றும் பழங்குடியினர் கைவினை பொருட்கள்)	10.00
2.	குடிநீர், ஓய்விடம் மற்றும் அடிப்படை வசதிகள்	4.00
3.	தகவல் மற்றும் வழிகாட்டிப் பலகைகள்	3.00
4.	உள்ளூர் இளைஞர்களுக்கான பயிற்சி	2.60
5.	இதர செலவினங்கள்	2.00
மொத்தம்		21.60

ஒரு மாவட்டத்திற்கு ரூ.21.60 இலட்சம் வீதம், 5 மாவட்டங்களுக்கு மொத்த திட்ட மதிப்பீடு ரூ.108.00 இலட்சம் (ரூ.1,08,00,000/– ரூபாய் ஒரு கோடியே எட்டு இலட்சம் மட்டும்) தேவைப்படுவதாக இயக்குநர், பழங்குடியினர் நலம் அவர்கள் தெரிவித்துள்ளார்.

7. மேற்காணும் அறிவிப்பான "பழங்குடியின மக்களின் கலாச்சாரம் பண்பாடு, மற்றும் வாழ்க்கை நடைமுறைகளை அறிந்து கொள்ளும் பொருட்டு "தடம்" பழங்குடியினர் மரபு நடை (TN Tribal Trails – Thadam) கலாச்சார பயண நிகழ்ச்சி நடத்தப்படும்" என்ற இத்திட்டத்திற்கான மொத்தத் தொகையான ரூ.1,08,00,000/– (ரூபாய் ஒரு கோடியே எட்டு இலட்சம் மட்டும்) மதிப்பீட்டில் நிர்வாக அனுமதியும் அதற்கான செலவினம் மேற்கொள்ள நிதி ஒப்பளிப்பும் வழங்கிடுமாறு பழங்குடியினர் நல இயக்குநர் அரசினை கேட்டுக்கொண்டுள்ளார்.

8. பழங்குடியினர் நல இயக்குநர் அவர்களின் கருத்துருவினை கவனமுடன் ஆய்வு செய்து, அதனடிப்படையில் 2026–27–அம் ஆண்டிற்கான மாண்புமிகு அமைச்சர் (சமூகநீதி) அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்தும்

பொருட்டு, "பழங்குடியின மக்களின் கலாச்சாரம் பண்பாடு, மற்றும் வாழ்க்கை நடைமுறைகளை அறிந்து கொள்ளும் பொருட்டு "தடம்" பழங்குடியினர் மரபு நடை (TN Tribal Trails – Thadam) கலாச்சார பயண நிகழ்ச்சி திட்டத்தை நீலகிரி, கோயம்புத்தூர், திருவண்ணாமலை, கன்னியாகுமரி மற்றும் ஈரோடு ஆகிய ஐந்து மாவட்டங்களில் செயல்படுத்த நிர்வாக அனுமதியும், இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த ஒரு மாவட்டத்திற்கு ரூ.21.60 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.1,08,00,000/- (ரூபாய் ஒரு கோடியே எட்டு இலட்சம் மட்டும்)-ஐ, ஆன்றோர் மேம்பாட்டுத் திட்டத்தின் வருவாய் இனத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூ.30.00 கோடி நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள நிதி ஒப்பளிப்பும், வழங்கி அரசு ஆணையிடுகிறது.

9. மேலே பத்தி 8-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"2225 – ஆதிதிராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் – 02 பழங்குடியினர் நலன் – 796 பழங்குடியினர் முன்னேற்றத்திற்கான சிறப்பு செயல் திட்டம் (DAPST) – மாநிலச் செலவினங்கள் – JY விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் – 309 உதவித்தொகை – 01 நடப்புச் செலவுக்கான உதவித்தொகை".

(IFHRMS DPC: 2225 02 796 JY 30901.)

10. ஒப்பளிக்கப்பட்ட தொகையை பயன்படுத்தியதற்கான சான்றினை அரசுக்கு அனுப்புமாறு பழங்குடியினர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். இத்திட்டத்தினை, ஆதிதிராவிட நல இயக்குநரகம், பழங்குடியினர் நல இயக்குநரகம் மற்றும் தாட்கோ நிறுவனத்தின் வாயிலாக தேர்வு செய்து பட்டியலில் வைக்கப்பட்டுள்ள (empanelled) நிறுவனத்தின் மூலம் செயல்படுத்துமாறு பழங்குடியினர் நல இயக்குநர் அனுமதிக்கப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

என். சுப்பையன்,
அரசு செயலாளர்

பெறுநர்

இயக்குநர், பழங்குடியினர் நலம் , சென்னை -600 005.
இயக்குநர், பழங்குடியினர் ஆராய்ச்சி மையம்,
உதகமண்டலம், நீலகிரி மாவட்டம்.
சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள்
(இயக்குநர், பழங்குடியினர் நலம் அவர்கள் வழியாக)
சம்மந்தப்பட்ட மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள்,
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை -600 018/35.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை – 600 009.

த.பி.பா.

நகல்

சமூக நீதித்துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை –600 009.
சமூக நீதித்துறை அரசு செயலாளர் அவர்களின் தனிச் செயலர்,
சென்னை –600 009.
நிதி (வரவு செலவு/ஆதி(ம)பந) துறை, சென்னை – 600 009.
சமூக நீதித் (ஆதிந.5) துறை, சென்னை –600 009.
இருப்புக்கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்